மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.V.செல்வராஜ்

அனுமதி. எண்: 03 /2023 - 2024 நாள்: 14 /09/2023

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - கரூர் மாவட்டம் - கரூர் வட்டம்- தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், மூக்கணாங்குறிச்சி ஊராட்சி - மூக்கணாங்குறிச்சி கிராமம் சர்வே எண்:87/8Bல் 3168ச.மீ பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை: 1.மனுதாரர் B.விஜய்ஆனந்த் மற்றும் R.பாலுசாமி,நெ.2, பழனியப்பா கார்டன்ஸ், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம்-4 அவர்களின் விண்ணப்பம் நாள்:31.03.2023.
2. கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ROC No: 6W07SQS5/2023/2023/TCP, Dt: 24.07.2023 .
3. மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மான எண்:136/2023 - 2024, நாள்:31.07.2023

உத்தரவு:

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், மூக்கணாங்குறிச்சி ஊராட்சி சர்வே எண்:87/8Bல் 3168ச.மீ பரப்பளவு கொண்ட " **கிரீன் கார்டன்** " இடத்தில் அமையும் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கக் கோரி பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தின்படி, பார்வை 2ல் காணும் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை, உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்:ROC No:6W07SQS5/2023/2023/TCP, நாள்:24.07.2023 SWP/DTCP/ Karur/LAYOUT No:162/2023-ன்படி மனைப் பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், மூக்கணாங்குறிச்சி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய சாலைகள், பொது இடம், மூலை முடக்குகள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஆகியவற்றை வெள்ளியணை சார்பதிவக புத்தக ஆவணம் எண்:3356/2023 நாள்:19.06.2023-ன்படி மூக்கணாங்குறிச்சி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், பார்வை 3ல் காணும் மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மானம்:136/2023 - 2024, நாள்:31.07.2023 -ன்படி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

மேற்படி மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 16 மனைக்கான மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.16,000/- (ரூபாய் பதினாராயிரம் மட்டும்) மூக்கணாங்குறிச்சி ஊராட்சி பல்வகை இரசீது எண்: 2907, நாள்: 14/9/23 மற்றும் உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.6500/-, (ரூபாய் ஆறாயிரத்து ஐநூறு மட்டும்) மூக்கணாங்குறிச்சி ஊராட்சி பல்வகை இரசீது எண்: 2908, நாள்: 14/9/23 -ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, கரூர் மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், மூக்கணாங்குறிச்சி ஊராட்சி, சர்வே எண்: 87/8Bல் 3168ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் " **கிரீன் கார்டன்** " மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

மூக்கணாங்குறிச்சி ஊராட்சி

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
மூக்கணாங்குறிச்சி ஊராட்சி.

பெறுதல்,

B.விஜய்ஆனந்த் மற்றும் R.பாலுசாமி,
நெ.2, பழனியப்பா கார்டன்ஸ்,
பசுபதிபாளையம் அஞ்சல்,
கரூர் தாலுக்கா,
கரூர் மாவட்டம்-4.

நகல்:

உதவி இயக்குநர் அவர்கள்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்:9, முதல் தளம், இலட்சுமிபுரம் வடக்கு தெரு,
கரூர் நகரம்,கரூர் மாவட்டம் - 639001.

2) சார்பதிவாளர்,
வெள்ளியணை சார்பதிவு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

மூக்கணாங்குறிச்சி ஊராட்சி

தீர்மான நகல்

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நாள்:31.07.2023 அன்று காலை 11.00மணிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.V.செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வ.எண்	பொருள்	தீர்மானம் எண்:
	பொருள்: மூக்கணாங்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண்: 87/8Bல் 3168ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள " **கிரீன் கார்டன்** " மனைப்பிரிவிற்கு கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கை கடிதம் ROC No: 6W07SQS5/2023/ 2023/TCP, நாள்:24.07.2023-ன்படி மனைப் பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. இக்கடிதத்தில் சிறப்பு நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளபடி மனைப்பிரிவிற்கான கூராய்வு கட்டணம் ரூ.16000/- மற்றும் சந்தை மதிப்பீட்டில் 3% தொகை ரூ.6500/-ஐ உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்றக் கட்டணமாக மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்றத்திற்கு செலுத்திய பிறகு மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு ஊராட்சி மன்ற அனுமதி கோருதல்.	தீர்மானம் எண்: **136/2023-2024** ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. தலைவர் மூக்கணாங்குறிச்சி ஊராட்சி தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் கரூர் மாவட்டம்.

//உண்மை நகல்//